**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.212/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.6 |
| Name | : | இரும்புதுரை |
| Father's Name/Husband Name: | | நடேசன் |
| Village | : | நக்கசேலம் |
| Taluk | : | ஆலத்தூர் |
| Age | : | 60/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.07.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 2,4,5 ஆஜர். எதிரிகள் 1 மற்றும் 3 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது நக்கசேலம் கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. அ.சா.1 மற்றும் அடிப்பட்ட நபர்களை யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவத்தன்று நான் ஊரில் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய உறவினரான ராஜேந்திரன் என்பவருக்கு உடல்நிலை சரியில்லாததால் அவரை பார்ப்பதற்காக நானும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரை உள்ளவர்கள் அனைவரும் 16.02.2020 ம் தேதி இரவு 8 மணியளவில் பிரியா கடைக்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது 1ம் எதிரி பிரியாவை கெட்ட வார்த்தையால் திட்டி

அடித்ததாகவும் அதைக் கேட்ட அ.சா.2யை 1ம் எதிரி சேலையை பிடித்து அடித்ததாகவும், தடுக்கச் சென்ற அ.சா.4, அ.சா.1யையும் மற்றும் அ.சா.2, என்னையும் காளிமுத்து ஆகியோர்களை 1 முதல் 5 வரையிலான எதிரிகள் அனைவரும் கெட்ட வார்த்தையால் திட்டினார்கள் என்றால் சரியல்ல.

1ம் எதிரி அ.சா.1யை காலால் உதைத்ததாகவும், என்னை 1ம் எதிரி காலால் இடது பக்க காது பக்க தோள்பட்டை இடது முழுங்கால் ஆகிய இடங்களில் குத்தியதாகவும், என்னையும் 3ம் எதிரி வலது விலா, வலது நடுவிரலில் கல்லால் குத்தியதாகவும், எதிரி உதயக்குமார் என்னை காலால் இடது பக்க தேள்பட்டை முழங்காலில் அடித்ததாகவும், சாட்சி கலியமுத்துவை 4 மற்றும் 5ம் எதிரி முடியை பிடித்து இழுத்து கண்ணத்தில் அடித்தும் அவர் வைத்திருந்த ஆயுதங்களை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நானும் எதிரிகளும் தற்போது சமாதானமாக சென்றுவிட்டோம் என்றால் சரிதான். அதனால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.